# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண். 90/மா/2021
நாள். 13.10.2021

திரு A. சதீஷ்குமார்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –4,
சென்னை பெருநகர மாநகராட்சி,
சென்னை. – எதிர்மனுதாரர்கள்

உதவி செயற்பொறியாளர்,
மண்டலம் –4,
சென்னை பெருநகர மாநகராட்சி,
சென்னை.

பெரு நகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, சாஸ்திரி நகர், எண்.21/16, 2–வது தெருவில் வசிக்கும் திரு A. சதீஷ்குமார் என்பவரின் 13.07.2020 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 90/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

பெரு நகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, சாஸ்திரி நகர், எண்.21/16, 2–வது தெருவில் வசிக்கும் திரு A. சதீஷ்குமார் என்பவர் தனது முறையீட்டு மனுவில் சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை மண்டலம் –4, வார்டு 38, பகுதி 09, சாஸ்திரி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள வீட்டு கதவு எண்.15/20 மனை எண்.324, ஆகிய இந்த மனை தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியத்திற்கு சொந்தமானதாகும். இந்த இடம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான உரிமையில் பிரச்சனை எனக்கும் திரு ஜெயசீலன் மற்றும் அவர்களுடைய சகோதரர்களுக்குமிடையே நடந்து வருகிறது. இது தொடர்பான மனு தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியத்தில் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் இந்த வருடம் பிப்ரவரி மாதம் முதல் மேற்கண்ட இடத்தில் மாநகராட்சியிடம் எந்த அனுமதியும் பெறாமல் கட்டடம் கட்டப்பட்டு கொண்டு வருகிறது. இந்த விதிமீறல்கள் தொடர்பாக நான் கடந்த 08.03.2020 அன்றே எழுத்துப்பூர்வமாக புகார் மனுவை மண்டலம் –4க்கு பதிவு அஞ்சலில் அனுப்பியிருக்கிறேன்.

2. மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பாக சென்னை பெருநகர மாகராட்சி அலுவலர்கள் பெயரளவிற்கு ஒரு அறிவிப்பை 04.02.2020 அன்று கொடுத்து விட்டு பிறகு எந்த சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விட்டனர். அதனால் மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானம் தொடர்ந்து நடைபெற்று தற்போது முடியும் தருவாயில் உள்ளது. இது தொடர்பாக என்னால் தொடர்ந்து இணையதள புகார்கள் (online complaint) கொடுக்கப்பட்டும் தற்போது வரை எந்தவிதமான சட்டபூர்வ நடவடிக்கைகளும் மேற்கண்ட மாநகராட்சி அலுவலர்களால் எடுக்கப்படவில்லை.

3. எங்கள் பகுதியான மண்டலம் –4க்கு உட்பட்ட இடங்களில் பெரும்பாலும் முறையாக அனுமதி பெறாமல் கட்டுமானம் நடைபெறுவதும், அதற்காக மாநகராட்சி அலுவலர்கள் குறிப்பிட்ட தொகைளை முறைகேடாக பெற்றுக் கொண்டு எந்த சட்ட நடவடிக்கைகளும் எடுக்காமலும் பின்பு ஒரு தொகைகளை முறைகேடாக பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட வீட்டிற்கு சொத்து வரி விதிப்பதும் தொடர்கதையாகிக் கொண்டு இருக்கிறது. இதன்மூலம் மிகபெரிய அளவில் லஞ்சமும், ஊழலும் நடைபெற்றுக்கொண்டு இருப்பது கசப்பான உண்மையாகும். ஏற்கனவே சென்னை பெருநகர மாநகராட்சிக்கு உட்பட்ட குடியிருப்பு பகுதிகளில் பாதிக்கும் மேற்பட்ட தெருக்களின் அகலம் குறுகிக்கொண்டே போவது மேற்கண்ட முறையான அனுமதி பெறாமல் கட்டுமானம் நடைபெறுவதின் விளைவாகும் என இம்முறை மன்ற நடுவத்திற்கு புகார் தெரிவித்து உரிய பரிகாரங்களை வழங்கிட முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –4, மண்டல அலுவலர், உதவி செயற்பொறியாளர் மற்றும் மனுதாரர் ஆகியோர் 17.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.02.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. முறையீட்டு மனுதாரர்

மற்றும் எதிர்மனுதாரர்கள் 17.02.2021 அன்றைய விசாரணைக்கு ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

5. முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் "திரு லாரன்ஸ் ஜெயசீலன் என்பவர் உரிய அனுமதி மற்றும் அங்கீகாரமின்றி அரசுக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டி வருகிறார். இந்த கட்டிட வேலை கதவு எண்.15/20 ஆகும். என்னுடைய புகாரின் அடிப்படையில் எதிர் மனுதாரர்களுக்கு மாநகராட்சியால் அறிவிப்பு ஆணை மிகவும் காலதாமதமாக அனுப்பியுள்ளது. இருப்பினும் இறுதியாக நடவடிக்கை இதுவரை எதுவும் எடுக்கப்படவில்லை. நீண்டகால தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது பணியில் உள்ள உதவி ஆணையர் வேலை நிறுத்த ஆணை வழங்கியுள்ளார். அதன் அடுத்தகட்டமாக கட்டிடத்திற்கு சீல் வைத்து மூடப்படும் என்று தெரிய வருகிறது. இந்நிலையில், எதிர் மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தை அனுகி ஒரு ஆணையைப் பெற்று வீட்டுவசதி துறை மற்றும் நகர்புற வளர்ச்சி செயலாளருக்கு உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதுவரை தற்போது இருக்கும் நிலையே தொடர வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. இது சம்பந்தமாக என்னுடைய மனுவினை வீட்டு வசதி செயலர் வீடியோ கான்பரன்ஸ் மூலம் எனது சாட்சியத்தை கோருவதற்கு 25.02.2021 அன்று நிர்ணயம் செய்யப்பட்டு எனக்கு அழைப்பு ஆணை வந்துள்ளது. கடந்த 2018ம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சி மற்றும் வீட்டு வசதி துறையில் பல மனுக்கள் அனுப்பியும், இதுவரை நடவடிக்கை எடுக்காமல் மிகுந்த தாமதம் செய்கின்றனர் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. மண்டல அலுவலர், மண்டலம் –4, தனது 17.02.2021 நாளிட்ட எழுத்துபூர்வ வாக்குமூலத்தில் கடந்த 04.02.2020 அன்று கள ஆய்வு செய்ததன் அடிப்படையில் திரு ஜெயசீலன் என்பவர் மண்டலம் –04, வார்டு –38 சாஸ்திரி நகர் பிரதான சாலையில் வீட்டு கதவு எண்.15/20, மனை எண்.324–ல் அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவது தெரிய வந்தது. எனவே, அந்த கட்டிடத்திற்கு கடந்த 04.02.2020 அன்று வேலை நிறுத்த தாக்கீது ( Stop work Notice/Calling for Approved Plan வழங்கப்பட்டது. மேலும், அதன் தொடர்ச்சியாக , கடந்த 11.07.2020 அன்று இக்கட்டிடத்திற்கு கட்டிடம் பூட்டி மற்றும் சீல் வைக்கும் தாக்கீது (Lock and Seal and Demolition Notice) வழங்கப்பட்டது. மேலும், கடந்த 25.08.2020 அன்று இக்கட்டிடத்திற்கு பயன்பாட்டிலிருந்து வெளியேற்றும் தாக்கீது (De-occupation Notice) வழங்கப்பட்டுள்ளது என்று தனது (Written Statement) வாக்குமூல அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் 17.02.2021 நாளிட்ட வாக்குமூல அறிக்கையில் தெரிவித்ததையே தனது 14.07.2021 நாளிட்ட அறிக்கையிலும் தெரிவித்துள்ளார். மேலும் திரு ஜெயசீலன் என்பவர் மாநகராட்சி அலுவலர்களால் வழங்கப்பட்ட தாக்கீதுகளை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.M.P. No. 16994/2020 in W.P. No.13670/2020 தொடர்ந்தார். இவ்வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் 01.10.2020 அன்று பிறப்பித்த தீர்ப்பில் வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறை செயலர் (முதல் பிரதிவாதி) அவர்கள் நிலுவையில் இருக்கும்

மேல் முறையீட்டு மனு மீது தக்க ஆணை பிறப்பிக்குமாறும் அதுவரை தற்போதைய நிலையே தொடருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

7. இதன் தொடர்ச்சியாக வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறையினர் மேற்குறிப்பிட்ட கட்டிடத்தின் அளவு மற்றும் தன்மை போன்ற விவரங்களை கோரியதால் மேற்படி விவரங்களை வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறையினருக்கு வழங்கப்பட்டது எனவும் மேலும் இது தொடர்பான விசாரணை வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறையில் நிலுவையில் உள்ளதால் வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறையிடமிருந்து இறுதி ஆணை பெறப்பட்டவுடன் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

8. இதனிடையில் மனுதாரர் திரு A. சதீஸ்குமார் தனது 01.07.2021 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார். " நான் கடந்த 2020 ஆண்டில் சாஸ்திரி நகர் கதவு எண்.15/20, என்ற முகவரியில் முறையான ஆவணம் இன்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க போடப்பட்ட புகார் மனுவில் தாங்கள் விசாரணை செய்தபோது சம்மந்தப்பட்ட கட்டிடத்தின் மீது சென்னை பெருநகர மாநகராட்சி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதின் பெயரில் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் எனக்கு மிகுந்த மனநிறைவு ஏற்பட்டது. தற்பொழுது 38 ம் வட்ட உதவி இளநிலை பொறியாளர் அவர்கள் சம்மந்தப்பட்ட எதிர்தரப்பினரை அழைத்து ஆவணங்களை சரிபார்த்தார். அதில் சம்மந்தப்பட்ட எதிர்தரப்பினர் முறையாக அனுமதி வேண்டியுள்ள கடிதத்தை காட்டினார்கள். தற்பொழுது உள்ள மாநகராட்சி பொறுப்பு உதவி இளநிலை பொறியாளர் அவர்கள் அதன் நகலை என்னிடம் தந்தார். ஆகவே சம்மந்தப்பட்ட கட்டிடத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை எனக்கு மனபூர்வமாக மகிழ்ச்சி ஏற்படுத்தியது.

மேலும் இந்த கட்டிடத்தை இடிப்பதோ அல்லது பழி வாங்குவதோ எனது லட்சியம் இல்லை. இந்த கட்டிடம் ஒரு மக்கள் பயன்பட கூடிய உணவகம். எனவே அதில் எந்த ஒரு குறையும் இல்லாமல் கட்டப்பட வேண்டும். முறையான அனுமதி பெற வேண்டும் என்பதே எனது முழு குறிக்கோளாக இருந்தது. அதை மாண்புமிகு நடுவர் அவர்கள் செயல்படுத்தியதற்கு நன்றி. மேற்படி கட்டிடத்தின் மீது நான் அளித்த அனைத்து புகாரையும் நான் திரும்ப பெற்றுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

9. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 4–வது மண்டல அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கைகள் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மண்டல அலுவலர் அவர்கள் இந்நிகழ்வில் குறிப்பிடப்படும் கட்டிடத்திற்கு கடந்த 04.02.2020 அன்று வேலை நிறுத்த தாக்கீது (Stop work Notice/Notice Calling for Approved Plan) வழங்கப்பட்டது என்றும், அதன் தொடர்ச்சியாக 11.07.2020 அன்று இக்கட்டிடத்திற்கு கட்டிடம் பூட்டி மற்றும் சீல் வைக்கும் தாக்கீது (Lock and Seal and Demolition Notice) வழங்கப்பட்டது எனவும், 25.08.2020

அன்று இக்கட்டிடத்திற்கு பயன்பாட்டிலிருந்து வெளியேற்றும் தாக்கீது (De-occupation Notice) வழங்கி சட்டப்படியான உரிய நடவடிக்கை எடுத்துள்ளதை அறிய முடிகின்றது.

10. மேலும் மனுதாரரும் சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கையில் தனக்கு மனப்பூர்வமாக மகிழ்ச்சி அளிக்கிறது என தெரிவித்து தனது 01.07.2021 நாளிட்ட கடிதத்தில் தான் அளித்த அனைத்து புகாரையும் திரும்பப் பெற்றுக் கொள்வதாக தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு கடிதம் அனுப்பி உள்ளார். இந்நிகழ்வில் மாண்பமை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறை ஆணை பிறப்பித்த பின் அக்கட்டிடம் தொடர்பான மேல் நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு A. சதீஷ்குமார்,
எண்21/16, 2–வது தெரு,
சாஸ்திரி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை–600 081.
2)மண்டல அலுவலர்,
மண்டலம் –4,
சென்னை பெருநகர மாநகராட்சி,
எண்.266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணார்பேட்டை,
தண்டையார்பேட்டை,
சென்னை–600 081.

3)ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

4)உதவி செயற்பொறியாளர்,
மண்டலம் –4, பகுதி –9, வார்டு 38,
சென்னை பெருநகர மாநகராட்சி,
எண்.266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணார்பேட்டை,
தண்டையார்பேட்டை,
சென்னை–600 081.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்